ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ நவமணிமாலை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ நவமணிமாலை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡ஒருமதி அன்பர் உளம் கவர்ந்தன⋆
உலகம் அடங்க வளர்ந்தளந்தன⋆
ஒருசடை ஒன்றிய கங்கை தந்தன⋆
உரக படங்கள் அரங்கு கொண்டன⋆
தருமம் உயர்ந்ததிதென்ன நின்றன⋆
தருமன் இரந்ததிசைந்து சென்றன⋆
சகடம் உடைந்து கலங்க வென்றன⋆
தமர்கள் அருந்து மருந்திதென்பன⋆
திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின⋆
திகழ் துளவுந்து மணம் கமழ்ந்தன⋆
செழு மணி கொண்ட சிலம்பிலங்கின⋆
சிலைதனில் அன்றோர் அணங்குமிழ்ந்தன⋆
அரு மறை அந்தம் அமர்ந்த பண்பின⋆
அயன் முடி தன்னில் அமர்ந்துயர்ந்தன⋆
அருள் தர எண்ணி அயிந்தை வந்தன⋆
அடியவர் மெய்யர் மலர்ப் பதங்களே (1)

மகரம் வளரும் அளவில் பௌவம் அடைய உற்றலைத்தனை⋆
வடிவு கமடம் என அமர்ந்து கிரிதனைத் தரித்தனை⋆
மலியும் அசுரன் உரம் இடந்து வசுதையைப் பெயர்த்தனை⋆
வலிகொள் அவுணன் உடல் பிளந்து மதலை மெய்க்குதித்தனை⋆
பகரும் உலகம் அடி அளந்து தமர்களுக்களித்தனை⋆
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவரைத் துணித்தனை⋆

www.prapatti.com

பணிய இசைவில் தசமுகன் தன் முடிகள் பத்துதிர்த்தனை⋆
பயிடும் உருவில் வரு பிலம்ப அசுரனைத் தகர்த்தனை⋆
நகரிதுவரை என உகந்து வரை கரத்தெடுத்தனை⋆
நடமொடியலு பரியில் வந்து நலிவறுக்கவுற்றனை⋆
நலியும் வினைகள் செகு மருந்தின் நலம் உறைந்த வெற்பினை⋆
நணுகு கருட நதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை⋆
அகர முதல உரை கொள் மங்கை கணவனுக்களித்தனை⋆
அடையும் வினதை சிறுவன் உய்ய அருள் கொடுத்துயர்த்தினை⋆
அடியும் அணையும் எனும் அனந்தன் அடி தொழக் களித்தனை⋆
அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே (2)

புரம் உயர்த்த அசுரர்கட்கோர்⋆ புறம் உரைத்த பொய்யினான்⋆
வரை எடுத்து மழை தடுத்த⋆ மழையொடொத்த மெய்யினான்⋆
திரை நிரைத்த கடல் எரித்த⋆ சிலை வளைத்த கையினான்⋆
அருள் கொடுத்து வினை தவிர்க்கும்⋆ அடியவர்க்கு மெய்யனே (3)

தேசொத்தார் இல்லை எனும்⋆ தெய்வ நாயகனார்⋆
வாசக் குழல் மா மலராள்⋆ மணவாளர்⋆
வாசித்தெழு மன்மதனார்⋆ மணல் தோப்பில்⋆
மாசிக் கடல் ஆடி⋆ மகிழ்ந்து வருவாரே (4)

உருளும் சகடம் ஒன்றுதைத்தாய்⋆
உலகம் ஏழும் உண்டுமிழ்ந்தளந்தாய்⋆
பொருளும் அழலும் மிறையாகப்
பூண்டேன்⋆ அடிமையினில் மீண்டேன்⋆
இருளும் மருளும் தரும் அந்நாள்⋆
எழிலார் ஆழி சங்கேந்தி⋆
அருளும் தெருளும் தர என்பால்⋆
அடியோர் மெய்ய! வந்தருளே (5)

வஞ்சனை செய் பூதனையை மலியும் சாட்டை⋆
மல்லரை ஓர் மதகளிற்றை வானோர் அஞ்சும்⋆
கஞ்சனை முன் கடிந்தவனி பாரம் தீர்த்த⋆
காவலனே! கோவலனாய் நின்ற கோவே⋆



www.prapatti.com

அஞ்சனமும் காயாவும் அனைய மேனி⋆
    அடியவர்க்கு மெய்யனே அயிந்தை வாழும்⋆
மஞ்செனவே அருள் பொழியும் வள்ளலே⋆ நின்
    வடிவழகு மறவாதார் பிறவாதாரே (6)

மையு மா கடலும் மயிலும் மா மழையும்⋆
    மணிகளும் குவளையும் கொண்ட
மெய்யனே⋆ அடியோர் மெய்யனே விண்ணோர்
    ஈசனே⋆ நீசனேன் அடைந்தேன்⋆
கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே⋆
    காலனார் தமர் எனைக் கவராது⋆
ஐயனே! வந்தன்றஞ்சல் என்றருள்⋆ தென்
    அயிந்தை மா நகர் அமர்ந்தானே (7)

‡மஞ்சுலாவு சோலை சூழ் அயிந்தை மன்னு மன்னு சீர்⋆
    வரை எடுத்து நிரை அளித்த மாசில் வாசுதேவனே⋆
செஞ்சொல் அன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனாய்த்⋆
    தேரும் ஊர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வ நாயக⋆
வெஞ்சொலாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென் மேல்⋆
    விழுந்தழுந்தி யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்ன நீ⋆
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்றளிக்க வேண்டும் அச்சுதா⋆
    அடியவர்க்கு மருள் இயக்கும் அடியவர்க்கு மெய்யனே (8)

‡பொருத்தம் பொருந்தலும்⋆
    போகும் தவற்றுடன் பொய்ம் மதி மேல்⋆
விருத்தம் கலித்துறை⋆ மேவும்
    அழல் மதம் வேறினி என்⋆
திருத்த மனத்தினில்⋆ சேரா
    எமைத் தெய்வநாயக⋆ நின்
வருத்தம் பொறா அருளால்⋆
    மன் அடைக்கலம் கொண்டருளே (9)

‡அந்தம் இல் சீர் அயிந்தை நகர் அமர்ந்த நாதன்⋆
    அடியிணை மேல் அடி உரையால் ஐம்பதேத்திச்⋆


www.prapatti.com

சிந்தை கவர் பிராகிருதம் நூறு கூறிச்⋆
செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்துப்⋆
பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல்⋆
பரவு நவமணிமாலை இவையும் சொன்னேன்⋆
முந்தை மறை மொழிய வழி மொழி நீ என்று⋆
முகுந்தன் அருள் தந்த பயன் பெற்றேன் நானே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com